தந்தி : ANNATIMUKA
பேக்ஸ் : 28133510, 24992255

அலுவலகம் : 28132266, 28130787
இல்லம் : 24992121, 24991414

# அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

**தலைமைச் செயலகம்**
**226, அவ்வை சண்முகம் சாலை, சென்னை - 600 014.**
**இல்லம்: "வேதா நிலையம்", 81, போயஸ் கார்டன், சென்னை - 600 086.**

**ஜெ ஜெயலலிதா**
பொதுச் செயலாளர், அ.இ.அ.தி.மு.க.,
தமிழ்நாடு முதலமைச்சர்

தேதி : 10.4.2016

அன்புடையீர்,

***வணக்கம்.*** கடந்த ஐந்தாண்டுகளில் இந்திய நாடே திரும்பிப் பார்க்கும் வகையிலும், உலக நாடுகள் பலவற்றில் விவாதிக்கப்படும் வகையிலும், சாதாரண ஏழை, எளிய உழைக்கும் மக்களின் பிரச்சினைகள் பலவற்றிற்கு தீர்வு கண்டு ஒரு வளமான, அமைதியான, எழுச்சியான தமிழகத்தை நான் உருவாக்கி இருக்கிறேன்.

"மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்பதை உளப்பூர்வமாக உணர்ந்து, இந்தத் தேர்தல் களத்தில் மக்களோடு கைகோர்த்து மகத்தான வெற்றியை நோக்கி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடைபோடுகிறது.

வருகின்ற **16.5.2016** அன்று நடைபெற உள்ள தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தங்கள் அமைப்பின் உளப்பூர்வமான ஆதரவை அளித்துள்ளமைக்கு என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் எனது தலைமையிலான நல்லாட்சி தொடர்ந்திடும் வகையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவதற்கு தாங்களும், தங்கள் அமைப்பின் நிர்வாகிகளும், தொண்டர்களும் தீவிரமாக களப்பணி ஆற்றிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

**ஜெ ஜெயலலிதா**

பெறுநர்

**திரு. டி. முருகசெல்வம் அவர்கள்**
தலைவர், பொதுச் செயலாளர்,
அகில பாரத விஸ்வகர்ம மகாசபா